**பத்திரிகை வெளியீடு**

கொழும்பு, 18 மே 2018

Good Food, Good Life

# நெஸ்லேயின் மைலோவிற்கு தொடர்ந்தும் நான்காவது தடவையாக 'மாணவர் விரும்பும் வருடத்தின் மிகச் சிறந்த பான வகை' என்ற மாணவர்களின் அமோக வாக்கு

## ஆரோக்கியமான தெரிவுகளை நுகர்வோர் மேற்கொள்ள உதவும் வகையில் தனது பல்வேறு முயற்சிகளுக்கு மத்தியில் மைலோ இவ்விருதை வென்றுள்ளது

நெஸ்லே நிறுவனத்தின் பிரபலமான பான வகை உற்பத்தியான மைலோவிற்கு மீண்டும் ஒரு முறை 'மாணவர் விரும்பும் வருடத்தின் மிகச் சிறந்த பான வகை' என தமது அமோக வாக்குகளை இலங்கை மாணவர்கள் வழங்கியுள்ளனர். இந்த வர்த்தகநாமத்தின் மீது நுகர்வோர் கொண்டுள்ள ஓயாத நேசம் மற்றும் உற்பத்தியின் தரம் மீது அவர்கள் தொடர்ந்தும் பேணி வருகின்ற வலுவான நம்பிக்கை ஆகியவற்றின் அடையாளமாக, தொடர்ந்து நான்காவது ஆண்டாகவும் இவ்விருதை மைலோ வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நெஸ்லே நிறுவனத்தின் பான வகை உற்பத்திப் பிரிவின் பிரதித் தலைமை அதிகாரியான நோர்மன் கன்னங்கர அவர்கள் கூறுகையில், *"கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக அடிமட்டத்தில் பாடசாலை விளையாட்டுக்களுக்கு ஆதரவளிப்பதில் மைலோ முன்னிலை வகித்து வந்துள்ளதுடன், பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் உடற்பயிற்சிகளை மேற்கொள்வதை ஊக்குவித்து வந்துள்ளதுடன், பிரகாசமான வாய்ப்புக்களைக் கொண்டுள்ள பல மாணவர்கள் தமது வாழ்வில் விளையாட்டுக்களில் வளர்ச்சி காண்பதற்கும் ஆதரவளித்துள்ளது. ஆரோக்கியமான காலையுணவை ஊக்குவிக்கும் பிரச்சாரம், பக்கட்டின் லேபிளில் ஊட்டச்சத்து விபரங்களை வெளிப்படையாகப் பொறித்தல் என ஏனைய பல்வேறு முன்னெடுப்புக்களை நாம் அண்மையில் மேற்கொண்டுள்ளோம். அதியுயர் தரம் கொண்ட எமது உற்பத்தி மற்றும் நாடெங்கிலும் சிறுவர்கள் மத்தியில் 'வெற்றி உணர்வை ஊக்குவிப்பதில்' பல தசாப்தங்களாக வழங்கி வந்துள்ள ஆதரவு ஆகிவற்றிற்கான இனங்காணல் அங்கீகாரமாக, நான்காவது தடவையாகவும் 'மாணவர் விரும்பும் வருடத்தின் மிகச் சிறந்த வர்த்தகநாமம்' என அமோக வாக்குகளை ஈட்டியுள்ளமை எமக்கு மிகுந்த மகிழ்ச்சியளிப்பதுடன், திருப்தியளிக்கும் ஒன்றாகவும் அமைந்துள்ளது,"* என்று குறிப்பிட்டார்.

மாணவர்கள் தமது கருத்துக்களுக்கு குரல் கொடுக்க வாய்ப்பளித்து, உள்நாட்டு இளம் சமூகத்தின் மத்தியில் சிறந்த பங்களிப்பை ஆற்றியுள்ள வர்தத்க நிறுவனங்களைப் போற்றும் வகையில், டி.எஸ். சேனாநாயக்க கல்லூரியின் வர்த்தக சங்கத்தால் ஆண்டு தோறும் 'மாணவர் விரும்பும் வருடத்தின் மிகச் சிறந்த பான வகை வர்த்தகநாமம்' என்ற விருது நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. தாம் விரும்புகின்ற வர்த்தகநாமத்திற்கான வாக்கினை அளிக்கும் முகமாக மேல் மாகாணத்தில் 9,000 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் மத்தியில் நடாத்தப்படுகின்ற ஒரு கருத்தாய்வின் பெறுபேறுகளின் அடிப்படையில் விருதுகள் வழங்கப்படுகின்றன. இந்த விருது அறிமுகப்படுத்தப்பட்ட காலம் முதல் ஒவ்வொரு ஆண்டும் 'மாணவர் விரும்பும் வருடத்தின் மிகச் சிறந்த பான வகை வர்த்தகநாமம்' என்ற விருதை மைலோ வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நெஸ்லே நிறுவனத்தின் மைலோ உற்பத்தியானது விட்டமின்கள் மற்றும் கனியுப்புக்களின் செழுமை நிரம்பிய, உலகின் முன்னணி சொக்கிலேற்று மோல்ற்று பான வகை உற்பத்தியாகும். இலங்கையிலுள்ள பல்லாயிரக்கணக்கான பாற்பண்ணை விவசாயிகளிடமிருந்து சேகரிக்கப்படுகின்ற புத்தம்புதிய பாலை உபயோகித்து தயாரிக்கப்படுகின்ற மைலோ, சிறுவர்கள் மத்தியில் பாலை அருந்தும் பழக்கத்தை ஊக்குவிக்கின்றது. உலகெங்கிலும் பிரசித்தி பெற்ற நெஸ்லேயின் அதியுயர் தர நடைமுறைகளைப் பேணியவாறு, குருணாகலிலுள்ள நெஸ்லேயின் அதிநவீன தொழிற்சாலையில் இது உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது.

வர்த்தகநாமத்தின் சமீபத்தைய முன்னெடுப்பாக *Milo* RTD (Ready-to-Drink) என்ற புதிய மற்றும் மறுசீரமைக்கப்பட்ட பொதியிடலுடன் அது வெளிவந்துள்ளது. மைலோவின் ஆதரவு பெற்ற ஆறு வேறுபட்ட பாடசாலை விளையாட்டுக்கள் தொடர்பான படங்களை அது கொண்டிருப்பதுடன், மாணவர்கள் மத்தியில் உடற்பயிற்சிகளையும் ஊக்குவிக்கின்றது. இப்புதிய பொதியிடலானது ஊட்டச்சத்து தொடர்பில் மேம்பட்ட விபரங்களைக் கொண்ட லேபிளுடன் வெளிவந்துள்ளது. ஒவ்வொரு *Milo* RTD பக்கட்டிலும் இரு தேக்கரண்டி அளவிற்கும் குறைவான சுக்குரோசு (சீனி சேர்வை) அடங்கியுள்ளதுடன், இது உற்பத்தியில் 5 சதவீதத்திற்கும் குறைந்த அளவாகவே காணப்படுகின்றது. உள்நாட்டில் பாலை மூலப்பொருளாகக் கொண்ட பான வகை உற்பத்திப் பிரிவில் மிகவும் குறைந்த அளவு மட்டங்களில் சுக்குரோசைக் கொண்டுள்ள பான வகை உற்பத்திகளுள் ஒன்றாக *Milo* RTD தற்போது உள்ளது.

கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக, நாட்டில் பாடசாலை விளையாட்டுக்களை அபிவிருத்தி செய்வதில் மைலோ தீவிர ஈடுபாட்டுடன் செயற்பட்டு வந்துள்ளது. ரக்பி, நீச்சல், வலைப்பந்தாட்டம், தடகள விளையாட்டுக்கள் மற்றும் ஹொக்கி போன்ற பல்வேறுபட்ட விளையாட்டுக்களுக்கு ஆதரவளித்து, பாடசாலை விளையாட்டுக்கள் மட்டத்தில் வலுவான ஒரு பங்காளராகத் திகழ்ந்து வந்துள்ளது. பாடசாலைகளின் விளையாட்டு நாட்காட்டியில் மாபெரும் இறுதி நிகழ்வாக அமையப்பெறுகின்ற இலங்கை பாடசாலைகள் வர்ண விருதுகள் நிகழ்விற்கும் மைலோ ஆதரவளித்து வருவதுடன், மிகச் சிறந்த விளையாட்டு நட்சத்திரங்களின் சிறப்பான பெறுபேறுகளுக்கு இந்நிகழ்வின் மூலமாக இனங்காணல் அங்கீகாரம் அளிக்கப்பட்டு வருகின்றது. தேசிய மட்டத்தில் பாடசாலை விளையாட்டு நிகழ்வுகளுக்கு மைலோ ஆதரவளித்துள்ளமை, பிரகாசமான எதிர்காலத்தைக் கொண்ட பல தட கள வீரர்களை வளர்ச்சி பெறச் செய்ய உதவியுள்ளதுடன், அவர்களில் பலரும் எமது தேசத்தை பிரதிநிதித்துவம் செய்யும் அளவிற்கு திறமையான வீரர்களாக வளர்ச்சி கண்டுள்ளனர். குறிப்பாக, தற்போதைய தேசிய கிரிக்கெட் அணியின் தலைவரும், மைலோ வர்த்தகநாமத் தூதுவருமான அஞ்சலோ மத்தியூஸ் அவர்கள், தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக இலங்கை பாடசாலைகள் வர்ண விருதைப் பெற்றுள்ளார்.

மேலும், 'Mom, Me and My Milo' என்ற தனது வருடாந்த நிகழ்வின் மூலமாக முழுமையான மற்றும் சமநிலையான உணவு என்ற வர்த்தகநாமத்தின் பிரதான உறுதிமொழியை மைலோ வலுப்படுத்தியுள்ளதுடன், பல்லாயிரக்கணக்கான சிறுவர்களுக்கு பைசிக்கிள்களை நன்கொடையளித்து, உடற்பயிற்சிகளை மேற்கொள்வதை விநோதமாகவும் முன்னெடுக்கலாம் என்பதை வெளிக்காண்பிக்கும் வகையில் சைக்கிள் அணிவகுப்பு ஒன்றையும் ஏற்பாடு செய்து வருகின்றது. சிறுவர்கள் மற்றும் அவர்களுடைய பெற்றோர்களை ஒன்றுதிரட்டி, நாட்டில் மிகப் பாரிய காலையுணவு ஒன்றுகூடலாகவும் இந்நிகழ்வு அமைந்துள்ளதுடன், தினந்தோறும் ஆரோக்கியமான காலையுணவை உட்கொள்வோம் என்ற உறுதிமொழியை அவர்கள் முன்னெடுப்பதையும் ஊக்குவிக்கின்றது. ஆரோக்கியமான காலையுணவை உட்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பில் ஆண்டு முழுவதும் பத்திரிகை மற்றும் சமூக ஊடகம் ஆகியவற்றின் மூலமாக மைலோ முன்னெடுக்கும் விழிப்புணர்வைக் கட்டியெழுப்பும் பிரச்சாரத்தின் ஒரு அங்கமாகவும் இது அமைந்துள்ளது.

-